வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu








Email : eelanaduweekly@gmail.com மலர் : 07 07.01.2026 புதன்கிழமை இதழ் : 07 பக்கங்கள் : 08


# அவசரகால சட்டத்தை இன்னமும் 2 மாதங்களுக்கு நீடிக்கவேண்டும்



**பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர்**

கொழும்பு, ஜனவரி 07

**“நாட்டில் தற்போதுள்ள அவசரகால சட்டம் குறைந்தது இன்னும் இரு மாதங்களுக்கேனும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்”, - இவ்வாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால தெரிவித்துள்ளார்.**

நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், “டித்வா சூறாவளியால் இடம்பெயர்ந்த சிலரை அரசாங்கம் வேறு இடத்துக்கு மாற்ற வேண்டியிருப்பதால் இது அவசியம். இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்துவதற்கு தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தின் ஒப்புதல் அவசியம் - என்றும் அவர் கூறினார். (ஐ)

## தேர்தல் வாக்குறுதிகளை அரசாங்கம் மீறியுள்ளது!

**எதிர்க்கட்சி தலைவர் சாடல்**

கொழும்பு, ஜன. 07

டித்வா சூறாவளியால் மக்கள் பாதிக்கப்பட்டிருக்கும் நிலையில் அரசாங்கம் எரிபொருட்களின் விலையை அதிகரித்துள்ளதுடன், மின்சார கட்டணத்தையும் அதிகரிக்கத் தீர்மானித்திருக்கிறது. இதன் மூலம் அரசாங்கம் மக்களுக்கு வழங்கிய தேர்தல் வாக்குறுதிகளை மீறியுள்ளது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றியபோதே 07



## கனமழையும் வேகமான காற்றும் வடக்கு, கிழக்கில் அதிகரிக்கலாம்

**பேராசிரியர் பிரதீபராஜா எச்சரிக்கை**

யாழ்ப்பாணம், ஜன. 07

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நாளை முதல் வேகமான காற்று வீசுகையும் மிகமிகக் கனமழையும் பெய்யக்கூடும். இதனால், தாழ்நில பகுதி மக்கள் வெள்ளம் குறித்து அவதானமாக செயல்பட வேண்டும் என்று காலநிலை அவதானிப்பாளரும் யாழ். பல்கலைக்கழக புவியியல்துறை பேராசிரியருமான நா. பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

காலநிலை அவதானிப்பு தொடர்பில் அவர் நேற்று வெளியிட்ட பதிவிலேயே மேற்கண்டவாறு கூறியுள்ளார். அதில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு, 07

## தனியார் ஊழியர்களுக்கும் ஓய்வூதியம் வழங்க திட்டம்!

**தொழில் பிரதி அமைச்சர் மகிந்த**

கொழும்பு, ஜன. 07

தனியார் துறையின் ஊழியர்கள் ஊழியர் சேமலாப நிதியை (இ. பி. எவ்.) ஒரே தவணையில் பெறுவதற்குப் பதிலாக அந்த நிதியை ஓய்வூதியமாக வழங்கும் முறைமை தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

பிரதி தொழில் அமைச்சர் மகிந்த ஜெயசிங்க நேற்று பாராளுமன்றில் இதனைத் தெரிவித்தார். 07

## பாம்பு தீண்டி இளைஞர் பலி

கிளிநொச்சி, ஜன. 07

ஆலய வளாகத்தில் சிரமதானப் பணியில் ஈடுபட்டிருந்த இளைஞர் ஒருவர் பாம்பு தீண்டி உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று செவ்வாய்க்கிழமை கிளிநொச்சி - கல்மடு நகரில் இடம் பெற்றுள்ளது. 07

**மாகாண சபைகள் தேர்தல்:**

## தெரிவு குழுவை நியமிக்கும் பிரேரணை நேற்று சபைக்கு

கொழும்பு, ஜன. 06

மாகாண சபைகள் தேர்தல் முறைமையைத் தெரிவு செய்வது குறித்து ஆராய்வது தொடர்பில் பாராளுமன்றத் தெரிவுக்குழுவை நியமிப்பதற்கான பிரேரணை நேற்று பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது.

சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸவால் இந்தப் பிரேரணை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டது. இதற்கமைய, மாகாண சபைகள் தேர்தலை எந்தத் தேர்தல் முறைமையின் கீழ் நடத்த 07

## போதை மாத்திரைகளுடன் யாழ். நகரில் நால்வர் கைது!

யாழ்ப்பாணம், ஜன. 07

யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையம், நாயன்மார்கட்டு பகுதிகளில் போதை மாத்திரைகளுடன் சந்தேகநபர்கள் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதானவர்களிடமிருந்து 860 போதை மாத்திரைகளும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் கைப்பற்றப்பட்டன என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைதான சந்தேக நபர்கள் ஒட்டமாவடி, சங்கானை, நல்லூர், கொய்யாத்தோட்டம் பகுதிகளைச் சேர்ந்த 22 முதல் 29 வயதுக்குட்பட்டவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது. 07

## கச்சதீவு அந்தோனியாருக்கு பெப்ரவரி 27, 28இல் திருவிழா

யாழ்ப்பாணம், ஜன. 07

கச்சதீவு புனித அந்தோனியார் தேவாலயத்தின் வருடாந்தத் திருவிழா எதிர்வரும் பெப்ரவரி 27, 28ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

இதற்கான, முன்னாயத்த கூட்டம் நேற்று நெடுந்தீவு பிரதேச செயலகத்தில் நடைபெற்றது. பிரதேச செயலர் என். பிரபாகரன் தலைமையில் நடைபெற்ற இந்த கலந்துரையாடலில், நெடுந்தீவு கடற்படை சுட்டளை அதிகாரி, பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

இதன்போது குறைபாடுகளைக் களைதல், 07

## மட்டக்களப்பில் கனமழை; தாழ்நிலங்கள் வெள்ளத்தில்

மட்டக்களப்பு, ஜன. 07

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று அதிகாலை முதல் பரவலாக கனமழை பெய்தது. இதனால், தாழ்நிலங்கள் பல வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

இந்த நிலையில், போரதீவுபற்றில் திருப்பழுகாமம் கிராமம் உட்பட பல தாழ்நிலங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. சில வீடுகளுக்குள்ளும் வெள்ளநீர் உட்புகுந்துள்ளது.

அத்துடன், ஏற்கனவே குளங்களில் நீர் நிறைந்துள்ள நிலையில் குளங்களுக்கான நீர் வரத்து 07

## 72 ஆயிரம் பேர் இந்த ஆண்டில் அரச சேவையில் இணைவர்!

**தொழில் அமைச்சர் தெரிவிப்பு**

கொழும்பு, ஜன. 07

அரச சேவையில் புதிதாக 72 ஆயிரம் பேர் இணைத்துக் கொள்ளப்படுவர் என்று தொழில் அமைச்சரும் நிதி மற்றும் திட்டமிடல் இராஜாங்க அமைச்சருமான அனில் ஜயந்த பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

2026ஆம் ஆண்டில் பொதுமக்களுக்கு மிகவும் அத்தியாவசியமான மற்றும் நெருக்கமான சேவைகளை வழங்கும் முழு அரச சேவையிலும் உள்ள வெற்றிடங்கள் பூர்த்தி செய்யப்படவுள்ளன. குறித்த 07

## தொல்பொருள் திணைக்களத்துக்கு எதிராக வட, கிழக்கில் போராட்டம்!

**இலங்கை தமிழ் அரசு கட்சி**

மட்டக்களப்பு, ஜன. 07

“தொல்பொருள் திணைக்களத்துக்கு எதிராக வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தழுவிய மாபெரும் எதிர்ப்பு பேரணி ஒன்றை நடத்தவுள்ளோம்” - என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு - வெல்லாவெளி - கண்ணபுரம் பகுதி மக்களை சந்தித்தபோதே அவர் 07


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவன் மர்ம மரணம் நீதி கோரி போராட்டம்!

கேகாலை - தெரணியகல நூரித் தோட்டத்தில், 14 வயது சிறுவன் மர்மமான முறையில் உயிரிழந்த சம்பவத்துக்கு நீதி கோரி நேற்று அந்தப் பகுதி மக்கள் போராட்டம் நடத்தினர்.

சட்டவிரோத மதுபான விற்பனையே இந்த உயிரிழப்புக்குக் காரணம் என்று இதன் போது குற்றஞ்சாட்டப்பட்டது.

கடந்த 2ஆம் திகதி நூரித் தோட்டத்தில் 14 வயதுடைய சிறுவன் ஒருவர் உயிரிழந்தார்.

குறித்த சிறுவனின் பெற்றோர் மதுப் பழக்கத்துக்கு அடிமையானவர்கள் என்றும், அவர்களது அதீத மதுபோதையே சிறுவனின் மர்ம மரணத்துக்கு நேரடி அல்லது மறைமுகக் காரணியாக அமைந்திருப்பதாகவும் பிரதேச மக்கள் குற்றஞ்சாட்டினர்.

இந்த ஆர்ப்பாட்டத்தின் போது, தோட்டத்தில் தாராளமாகக் கிடைக்கும் சட்டவிரோத மதுபானம் காரணமாகப் பல குடும்பங்கள் சீரழிந்துள்ளன என்றும் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட மக்கள் தெரிவித்தனர்.

அத்துடன் மது போதையால் சிறுமிகள், பெண்கள் பாலியல் ரீதியான துன்புறுத்தல்களுக்கு ஆளாகின்றனர் என்றும் அவர்கள் வேதனை தெரிவித்தனர்.

பாடசாலை செல்லும் மாணவர்கள் கூட இந்த பழக்கத்திற்கு அடிமையாகி வருவதால், ஒரு சமூகமே அழியும் நிலையில் உள்ளதாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர். (ஐ)

# மீனவர்களுக்கான ஓய்வூதியம் விரைவாக நடைமுறைக்கு வரும்

## அமைச்சர் சந்திரசேகர் தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 07


மீனவர்களுக்கு அத்தியாவசியமாகத் தேவைப்படும் ஒரு வலுவான ஓய்வூதிய முறையை விரைவாக நடைமுறைப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது என்று கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் பாராளுமன்றில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

நாட்டின் வருமானத்துக்காகவும், மக்களின் ஊட்டச்சத்துக்காகவும் உயிரைப் பணயம் வைத்து உழைக்கும் மீனவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது அவசியம். தற்போது சமூகத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஓய்வூதியம் ஒழிக்கப்பட வேண்டும் என்ற விவாதங்கள் நடந்து வரும் சூழலில், உண்மையாக உழைக்கும் மீனவர்களுக்கு முறையான ஓய்வூதியம் வழங்கப்பட வேண்டியது அவசியம்.

கடந்த காலங்களில் கொண்டுவரப்பட்ட ஓய்வூதியத் திட்டங்கள் பல தோல்வி அடைந்துள்ளன அல்லது செயலற்றுப் போயுள்ளன. எனவே, மீனவர்களுக்கு அத்தியாவசியமாகத் தேவைப்படும் ஒரு வலுவான ஓய்வூதிய முறையை விரைவாக நடைமுறைப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

அண்மையில், ஏற்பட்ட டித்வா சூறாவளியால் மீனவர்கள் பெரும் அழிவை சந்தித்துள்ளனர். சூறாவளியால் 13 பல நாள் படகுகள் முற்றாக அழிந்துள்ளன. மேலும், 215 பாரம்பரிய படகுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன மற்றும் 3 உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன. பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு



தேவையான வலைகள் மற்றும் படகுகளை இலவசமாக மீளப் பெற்றுக் கொடுப்பதற்கும் தேவையான மானியங்களை வழங்குவதற்கும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது - என்றார். (ஐ)

# மதுபோதையில் பேருந்தை செலுத்திய சாரதிக்கு மறியல்

யாழ்ப்பாணம், ஜன. 07

மதுபோதையில் இலங்கை போக்குவரத்து சபையின் பேருந்து சாரதியை எதிர்வரும் 19ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் - ஊர்காவற்றுறை வீதியில் அல்லைப்பிட்டி சந்திக்கு அருகாமையில் ஊர்காவற்றுறை பொலிஸார் வீதி போக்குவரத்து கண்காணிப்பில் ஈடுபட்டிருந்தனர். இதன்போது இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்து ஆபத்தான முறையில் மிக வேகமாக வந்ததை அவதானித்து அந்தப் பேருந்தை மறித்து சோதனையிட்டனர். அப்போது, சாரதி மதுபோதையில் இருந்தமை கண்டறியப்பட்டது. அத்துடன், அவர் சாரதி அனுமதிப் பத்திரத்தையும் கைவசம் வைத்திருக்கவில்லை.

இதையடுத்து, அந்தப் பேருந்தின் சாரதி கைது செய்யப்பட்டார். கைது செய்யப்பட்ட சாரதி நேற்று முன்தினம் ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார்.

விசாரணையில், அவர் முன்னரும் போக்குவரத்து விதிமுறைகளை மீறியமை தெரிய வந்தது. இதைத் தொடர்ந்து குறித்த சாரதியை எதிர்வரும் 19ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ஐ)

# திருவாசக முற்றோதல்

யாழ்ப்பாணம், ஜன. 07

நல்லூர் வடக்கு சிறி சந்திரசேகர பிள்ளையார் ஆலயத்தில் எதிர்வரும் சனிக்கிழமை காலை 6. 15 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை திருவாசக முற்றோதல் நடைபெறவுள்ளது.

இதன்போது, 2025ஆம் ஆண்டு ஆலய பெருந்திருவிழா காலத்தில் நடைபெற்ற தெய்வீக கலை நிகழ்வில் பங்கொண்ட மாணவர்கள், அவர்களை நெறிப்படுத்திய ஆசிரியர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வும் நடைபெறவுள்ளது.

நிகழ்வுகளின் நிறைவில் மகேஸ்வர பூசையும் நடைபெறும். (ஐ)

# சாரதி அனுமதிப்பத்திர கட்டணத்தில் திருத்தம்

கொழும்பு, ஜன. 07

கட்டுநாயக்கா பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் அமைந்துள்ள மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தன் நிலையத்தில், வெளிநாட்டு சாரதி உரிமத்தின் அடிப்படையில் வழங்கப்படும் தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரத்துக்கான கட்டணங்களைத் திருத்தம் செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

விமான நிலைய வளாகத்தில் வழங்கப்படும் வசதிகளுக்கு 2 ஆயிரம் ரூபாய் அறவிடப்படுகிறது. இந்தக் கட்டணம் போதாது என்று கருதப்படுகிறது. எனவே, காலத்திற்கேற்ப கட்டணங்களை இற்றைப்படுத்தி, கடந்த வருடம் நவம்பர் மாதம் 17 ஆம் திகதி அதிவிசேட வர்த்தமானி மூலம் திருத்தப்பட்ட கட்டணங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இந்த ஒழுங்குவிதிகளைப் பாராளுமன்ற அங்கீகாரத்திற்காகச் சமர்ப்பிக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. (ஐ)

# 50 கோடி ரூபாய் பெறுமதியான போதைப்பொருளுடன் மூவர் கைது

கொழும்பு, ஜன. 07

கட்டுநாயக்கா பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் சுமார் 50 கோடி ரூபாய்க்கும் அதிக பெறுமதியான குஷ் ரக போதைப்பொருட்களுடன் இந்திய பிரஜைகள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் தாய்லாந்தின் பாங்கொக் நகரிலிருந்து சிறீ லங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்துக்குச் சொந்தமான யு. எல். 403 என்ற விமானம் மூலம் இலங்கை வந்துள்ளனர்.



விமான நிலைய பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் போதைப் பொருள் தடுப்புப் பிரிவினர் மேற்கொண்ட சோதனையின் போது சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து 50 கிலோ குஷ் ரக போதைப்பொருள் கைப்பற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

# 850 கிலோ சுறா மீன்களுடன் 6 கடற்றொழிலாளர்கள் கைது

சிலாபம், ஜன. 07

சட்டவிரோதமாகப் பிடிக்கப்பட்ட 850 கிலோவுக்கும் அதிக நிறையுடைய சுறா மீன்களுடன் 6 மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வென்னப்புவ, வெல்லமன்கர மீன்பிடித் துறைமுகத்தில் நேற்று அதிகாலை இலங்கை கடலோர காவல் படையால் முன்னெடுக்கப்பட்ட விசேட சுற்றிவளைப்பின் போது, நெடுநாள் மீன்பிடி படகில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் இந்த சுறா மீன்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

கடலோர காவல் படை அதிகாரிகளால் பறிமுதல் செய்யப்பட்ட சுறா மீன்கள் மற்றும் மீன்பிடி படகுடன் சந்தேகநபர்கள் மேலதிக விசாரணைகள் மற்றும் சட்ட நடவடிக்கைகளுக்காக வெல்லமன்கர மீன்பிடி பரிசோதகர் பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (ஐ)

# வடமராட்சி கிழக்கில் இறந்து கரையொதுங்கும் ஆமைகள்



வடமராட்சி, ஜன. 07

வடமராட்சி கிழக்கு கடற்பகுதியில் சில நாட்களாக ஆமைகள் இறந்த நிலையில் கரையொதுங்கி வருகின்றன. நேற்றைய தினமும் ஆமையின் இறந்த உடல்கள் கரையொதுங்கிய உள்ளன.

கடல் சீற்றம் காரணமாக காயமடைந்து இந்த ஆமைகள் உயிரிழந்து கரையொதுங்குகின்றன என்று மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

இறந்து கரையொதுங்கிய ஆமைகள் உருக்குலைந்த நிலையில் காணப்படுகின்றன. (ஐ)

# இரணைமடு குளத்தின் 6 வான் கதவுகள் திறப்பு

கிளிநொச்சி, ஜன. 07

கனமழையுடனான கால நிலை நிலவும் என்று எதிர்பார்க்கப்படும் நிலையில் இரணைமடுக்குளத்தின் 6 வான் கதவுகள் நேற்று திறக்கப்பட்டன.

இரணைமடுக்குளத்தின் நீரேந்து பகுதிகளுக்கு கிடைக்கப்பெற்ற மழைவீழ்ச்சியை கருத்தில் கொண்டு இரு வான் கதவுகள் 06 அங்குலமும் 4 வான்கதவுகள் 01 அங்குலமும் திறக்கப்பட்டன.

இதன் மூலம் 0.149 கன சென்ரிமீற்றர் நீர் வெளியேற்றப்படுகிறது என்று நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தொடர்ந்து மழை எதிர்வு கூறல் காணப்படுகின்ற நிலையில் தாழ் நிலப்பகுதியில் உள்ளவர்கள் அவதானமாக இருக்குமாறும் அந்தத் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
07.01.2026 புதன்கிழமை
விசுவாவசு வருடம், மார்கழி 23

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
– யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

# ஐ. நா. தமிழர்களுக்கு தரப் போவது...?

யுத்தம் முடிந்து பதினாறு வருடங்களாகின்றன. சர்வதேசத்திடம் நீதியை கோருதல் என்பதுதான் இந்தக் காலத்தின் அரசியலாக இருந்தது. மற்றவர்களின் பொறுப்புக்கூறல் தொடர்பில் பேசுகின்ற தமிழ் கட்சிகளோ, தங்களின் அரசியல் தோல்விகள் தொடர்பில் எப்போதும் பொறுப்புக்கூற முற்படுவதில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் காலத்தில் சம்பந்தன் அடிக்கடி, தாங்கள் ஓர் இராஜதந்திர போராட்டத்தில் ஈடுபடுவதாகக் கூறிக்கொண்டிருந்தார். தேர்தல் மேடைகளிலும் சர்வதேசம் என்னும் சொல் தாராளமாக உச்சரிக்கப்படுவது உண்டு. அது, என்னவென்று தெரியாமலேயே அதிகமானவர்கள் உச்சரித்துக் கொண்டிருந்தனர்.

ஆலயங்களில் பக்தி கொண்டவர்கள் திருவிழாக்களுக்கு தவறாமல் செல்வது போன்று ஆண்டுகள்தோறும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக்கு சென்று வருவதை பெருமையாகக் கருதிக்கொண்ட தமிழ் அரசியல்வாதிகள் இருந்தனர். பேரவைக்கு முன்னால் நின்று எடுத்த படங்களை பத்திரிகைகளுக்கு அனுப்பி தாங்கள் இராஜதந்திர போர் புரிவதாகக் கூறியபோது நமது அப்பாவி மக்களும் நம்பினர். அரசியல்வாதிகளுக்கு விடயங்களை சரியாக முன்வைக்கத் தெரியாது என்றுகூறி, சிவில் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் என்போரும் அரசுசாரா நிறுவன நிதியில் ஜெனிவா சென்று வந்தனர். இவற்றின் ஒட்டுமொத்த விளைவு என்ன?

இலங்கைக்கு விஜயம் செய்த ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் வோல்கர் டர்க், ஜனாதிபதி அநுர குமாரவை சந்தித்தபோது, உள்ளக பொறிமுறையை வலியுறுத்தியிருந்தார். உள்ளக பொறிமுறையை ஏற்க முடியாது - எங்களுக்கு சர்வதேச விசாரணைதான் வேண்டும் என்பதுதான் அனைத்துத் தமிழ்த் தேசிய கட்சிகளினதும் அரசுசாரா நிறுவன தமிழ் சிவில் சமூகக் குழுக்களினதும் கோரிக்கையாக இருந்தது.

அவ்வாறாயின், கடந்த பதினாறு வருடங்களாக இவர்கள் மேற்கொண்ட சர்வதேச "லொபி"க்கு என்ன நடந்தது? இராஜதந்திர போராட்டத்துக்கு என்ன நடந்தது? ஏன் தங்களுடைய கோரிக்கைகளுக்கு உலகம் செவிசாய்க்கவில்லை? இது தொடர்பில், இன்றுவரையில் தமிழ் மக்களுக்கு எவராவது பொறுப்புச் சொல்லியிருக்கிறார்களா? பொறுப்புச் சொல்ல வேண்டும் என்னும் பொறுப்புணர்வு பற்றியும் எவரும் சிந்திக்கவில்லை.

உண்மையில், உலகம் செவிசாய்க்கவில்லையா அல்லது உலகத்தை விளங்கிக்கொள்ள தமிழ் கட்சிகளால் முடியவில்லையா?

இன்று உலகில் சர்வதேச சட்டம் என்று ஒன்று இருக்கிறதா? இருந்தால் அது யாருடைய கட்டுப்பாட்டில் இருக்கிறது? வெனிசுலாவின் மீதான அமெரிக்க இராணுவ நடவடிக்கை, அதனைத் தொடர்ந்து ஜனாதிபதி நிக்கலோஸ் மதுரோவும் அவரின் மனைவியும் கொண்டு செல்லப்பட்டனர். ஒரு நாட்டின் தலைவர் எந்த சட்டத்தின் அடிப்படையில் கொண்டு செல்ல முடியும்? யார் கேட்பது? கேட்டாலும் பதில் சொல்வது யார்? இதன் பின்னரும் சர்வதேசத்தில் அனைவரையும் கட்டுப்படுத்தக்கூடிய, சட்டமொன்று இருக்கிறது என்பதை நம்பினால் அது யாருடைய தவறு?

என்னதான் ஜனநாயகம் மனித உரிமைகள் பற்றிப் பேசினாலும்கூட, பலம் பொருந்திய நாடுகளின் நலன்கள் என்று வருகின்றபோது அவைகள் இரண்டாம் பட்சமாகிவிடுகின்றன. முள்ளிவாய்க்கால் தராத படிப்பினையை வேறு எதுவும் தமிழ் மக்களுக்கு தந்துவிடப் போவதில்லை.

யுத்தத்துக்குப் பின்னரான அரசியல் சூழலை தமிழ்த் தேசிய கட்சிகள் முறையாக, தூரநோக்கோடு கையாளவில்லை. மாறாக, கற்பனைகளின் வழியாகவும் ஊகங்களின் வழியாகவுமே கையாண்டது. உண்மைகளின் வழியாக கையாண்டிருந்தால் கடந்த பதினாறு வருடங்களில் சில விடயங்களையாவது சாதித்திருக்கலாம். இப்போது தமிழர் அரசியல் இன்னும் கீழ் நிலைக்குச் சென்றுவிட்டது. கிட்டத்தட்ட "பிச்சை வேண்டாம் நாயை பிடியுங்கள்", என்னும் நிலையில்தான் இன்றைய தமிழர் அரசியல். இதற்கு வேறு யாரும் காரணமல்லர். ஒரு காரணம் இருக்க முடியும் என்றால் அது தமிழ் கட்சிகளின் பொறுப்பற்ற அரசியல் அணுகுமுறை மட்டும்தான்.

# ஆராய்ச்சிக் கப்பல்கள் குறித்து 2 மாதங்களில் இலங்கை முடிவு

*கொழும்பு, ஜன. 07*

வெளிநாட்டு ஆராய்ச்சி கப்பல்களைக் கையாள்வதற்கான நடைமுறை தரத்தை இலங்கை, அடுத்த இரண்டு மாதங்களுக்குள் நிறைவு செய்யும் என வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

சீன ஆராய்ச்சி கப்பல்கள் நாட்டின் கடல் எல்லைக்குள் வருவதை அமெரிக்காவும், இந்தியாவும் கடந்த காலங்களில் கடுமையாக ஆட்சேபித்தன.

இதனையடுத்து, வெளிநாட்டு ஆராய்ச்சி கப்பல்களைக் கையாள்வதற்கான நடைமுறையை திட்டமிடுவதற்கு இலங்கை கடந்த ஆண்டு ஒரு குழுவை நியமித்திருந்தது.

எனினும், இதுவரை அந்தக் குழுவின் பணிகள் உறுதி செய்யப்படவில்லை என அமைச்சர் விஜித ஹேரத் குறிப்பிட்டுள்ளார்.

இந்தநிலையில், எதிர்வரும் இரண்டு மாதங்களுக்குள், இந்த நடவடிக்கை இறுதி செய்யப்படும் என எதிர்பார்ப்பதாகவும் வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்தியா மற்றும் சீனா தொடர்பான பூகோள அரசியல் பிரச்னைகள் காரணமாக, வெளிநாட்டு ஆராய்ச்சி கப்பல்களை நாட்டின் கடல் எல்லைக்குள் அனுமதிப்பதில் இலங்கை இராஜதந்திர சவால்களை எதிர்கொண்டுள்ளதாகவும் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

# சிறுவரிடம் அதிகரிக்கும் விற்றமின் டி குறைபாடு!

## வைத்தியர்கள் எச்சரிக்கை

*கொழும்பு, ஜன. 07*

சிறுவர்கள் அதிக நேரம் கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் டிஜிற்றல் சாதனங்களைப் பயன்படுத்துவதால், அவர்களுக்கு அவசியமான விற்றமின் டி சத்து குறைவடைந்து வருவதாக சுகாதார நிபுணர்கள் கவலை வெளியிட்டுள்ள னர்.

கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் ரப்கள் போன்றவற்றின் அதீத பயன்பாடு காரணமாக சிறுவர்கள் வீட்டிற்குள்ளேயே முடங்கிக் கிடக்கின்றனர்.

இதனால், விற்றமின் டி சத்தைப் பெற்றுக்கொள்ளக் கூடிய அதிகாலை நேரத்துச் சூரிய ஒளி அவர்களுக்குக் கிடைப்பதில்லை.

விற்றமின் டி இயற்கையாக உற்பத்தி செய்யப்படுவதற்கு காலை நேரச் சூரிய ஒளி இன்றியமையாதது.

இது சிறுவர்களின் நோய் எதிர்ப்பு மண்டல த்தை வலுப்படுத்துகிறது.

இந்தச் சத்து குறையும் போது, அவர்கள் இலகு வாக நோய்த்தொற்றுக ளுக்கு ஆளாக நேரிடும் என சிறுவர் நல விசேட மருத்துவ நிபுணர் மருத்துவர் தீபால் பெரேரா எச்சரித்துள்ளார்.

சூரிய ஒளி கிடைப்பதுடன் மாத்திரமன்றி, வெளிப்புற விளையாட்டுக்களில் ஈடுபடுவது சிறுவர்களின் உடல் மற்றும் மன வளர்ச்சிக்கும் மிக அவசியமானது.

பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் "ஸ்கிரீன் டைம்" எனப்படும் டிஜிற்றல் சாதனங்களைப் பயன்படுத்தும் நேரத்தைக் குறைக்கவேண்டும்.

அதிகாலை வேளையில் பிள்ளைகளை வெளிப்புறச் செயற்பாடுகளில் ஈடுபட ஊக்குவிப்பதன் மூலம் ஆரோக்கியமான வாழ் க்கை முறையை உறுதிப்படு த்த முடியும் என மருத்துவர் தீபால் பெரேரா வலியுறுத்தியுள்ளார். (அ)

# பச்சை மிளகாய் விலை உயரும்

*கொழும்பு, ஜன. 07*

பச்சை மிளகாயின் விலை எதிர்வரும் நாட்களில் அதிகரிக்கக்கூடும் என விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

அடையாளம் தெரியாத நோய் பரவுவதால் பச்சை மிளகாய் செடிகள் முழுமையான அளவு பாதிக்கப்பட்டுள்ளதாக மதவாச்சி மற்றும் கெப்பட்டிப்பொல விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

தற்போது, ஒரு கிலோகிராம் பச்சைமிள காய் சந்தையில் 700 ரூபாய் வரையில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

பச்சை மிளகாய் உள்ளிட்ட ஏனைய சில மரக்கறிகளின் விலையும் பண்டிகை காலத்தை முன்னிட்டு அதிகரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)


# பொதுக் கூட்டமும் நிர்வாக தெரிவும்

*யாழ்ப்பாணம், ஜன. 07*

இருபாலை தெற்கு கமக்காரர்கள் அமைப்பின் வருடாந்த பொதுக் கூட்டமும் புதிய நிர்வாக தெரிவும் எதிர்வரும் சனிக்கிழமை காலை 9 மணிக்கு இருபாலை தெற்கு பொது நோக்கு மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

இதில், கமக்காரர்கள் அமைப்பின் அங்கத்தவர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு செயலாளர் நடேச பிள்ளை கஜேந்திரகுமார் அறிவித்துள்ளார். (ஐ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
எதிர்பார்த்தவைகளில் சில தள்ளிப் போனாலும் எதிர்பாராத ஒரு வேலை முடியும். புது வேலை அமையும். வியாபாரத்தில் பங்குதாரர்கள் ஒத்துழைப்பார்கள். நன்மை கிட்டும் நாள்.

**இடபம்**
குடும்பத்தில் சுபநிகழ் ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். சொத்துப் பிரச்சினைக்கு சுமுக தீர்வு கிடைக்கும். பிரபலங்களின் நட்பு கிடைக்கும்.உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும். நல்லன நடக்கும்.

**மிதுனம்**
கணவன்-மனைவிக்குள் இருந்த மனக்கசப்பு நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். பணப்புழக்கம் கணிசமாக உயரும். வேலையாட்களை தட்டிக் கொடுத்து வேலை வாங்குவீர்கள். மகிழ்ச்சியான நாள்.

**கடகம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சிலரின் விமர்சனங் களுக்கும் கேலிப் பேச்சிற்கும் ஆளாவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் உங்கள் பெயர் கெடாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

**சிம்மம்**
விடாப்பிடியாக செயல்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். பிள்ளைகளால் டென்ஷன் அதிகரிக்கும். வியாபாரத்தில் போட்டிகளையும் தாண்டி ஓரளவு லாபம் வரும். நிதானம் தேவைப்படும் நாள்.

**கன்னி**
தன்னம்பிக்கையுடன் பொது காரியங்களில் ஈடுபடுவீர்கள். பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். எதிர்பாராத சந்திப்பு நிகழும். வியாபாரத்தில் சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். மதிப்புக் கூடும்.

**துலாம்**
உங்கள் போக்கில் கொஞ்சம் மாற்றம் செய்வீர்கள். உறவினர்கள் நண்பர்கள் உங்களுக்கு முக்கியத்துவம் தருவார்கள். வியாபாரத்தில் புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். நன்மை நடக்கும் நாள்.

**விருட்சிகம்**
இதுவரை இருந்த சோர்வு நீங்கி உற்சாகமடைவீர்கள். குடும்பத்தில் அமைதி திரும்பும். அரைகுறையாக நின்ற வேலைகள் முடியும். வியாபாரத்தில் தள்ளிப் போன விஷயங்கள் முடியும்.

**தனுசு**
சந்திராஷ்டமம் இருப் பதால் சிக்கலான சவாலான காரியங்களையெல்லாம் கையில் எடுத்துக் கொண்டிருக்காதீர்கள். வியாபாரத்தில் வேலையாட்களால் சின்ன சின்ன பிரச்சினைகள் வரக்கூடும்.

**மகரம்**
உங்களின் அறிவாற்றலை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும். சகோதரர்களின் உதவி கிடைக்கும். தாயாரின் உடல் நிலை சீராகும். வேலைகளைப் பகிர்ந்துக் கொள்வார்கள். மகிழ்ச்சியான நாள்.

**கும்பம்**
ராஜதந்திரமாக செயல்பட்டு சில காரியங்களை முடிப்பீர்கள். உறவினர் நண்பர்கள் மத்தியில் அந்தஸ்து உயரும். சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். பழைய சிக்கல்கள் தீரும். வெற்றி பெறும் நாள்.

**மீனம்**
குடும்ப வருமானத்தை உயர்த்த முற்படுவீர்கள். உங்களை சுற்றி இருப்பவர்களின் நல்லவர்கள் யார் என்பதை கண்டறிவீர்கள். நட்பால் ஆதாயம் உண்டு. உத்தியோகத்தில் புது சலுகைகள் கிடைக்கும்.

# மேல் மாடிகளை கட்டுவதை விடுத்து முதலீடுகள் செய்ய முன்வரவேண்டும்

## புலம்பெயர் உறவுகளுக்கு சிறீதரன் எம். பி. அழைப்பு

கிளிநொச்சி, ஜன. 07

மேல் மாடிகளை கட்டுவதை விடுத்து முதலீடுகள் செய்வதற்கு முன்வர வேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் காணப்படுகின்ற காற்றாலை மின் உற்பத்தி மூலம் கிடைக்கும் நிதியில் குறித்த காற்றாலை மின் உற்பத்தி நிறுவனம் வடக்கு மாகாண விவசாய அமைச்சுக்கு வழங்கும் சமூக பொறுப்பு நிதி 19. 9 மில்லியன் ரூபாய் செலவில் கிளிநொச்சி, பச்சிலைப் பள்ளி பிரதேச சபையின் ஆளுகையின் கீழ் பிரதேச சபை வளாகத்தில் பாரம்பரிய உணவகத்



துக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்த நிகழ்வில் உரையாற்றியபோதே சிறீதரன் எம். பி. மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

"புலம்பெயர்ந்து வாழ்பவர்கள் இங்கு மேல் மாடிகளை கட்டுவதை விடுத்து முதலீடுகள் செய்வதற்கு முன்வரவேண்டும். தென்னிலங்கையிலிருந்து வந்து இங்குள்ள வளங்களை எவ்வாறு பயன்படுத்தி இலாபம் அடையலாம் என்று யோசித்து - தொழில் நிறுவனங்களை ஆரம்பிக்கின்றனர்.

ஆனால், எமது புலம்பெயர்ந்த உறவுகள் கோடிக்கணக்கில் காணிகளை வாங்கி விட்டு அதில் மேல் மாடிகளை கட்டிவிட்டு வெளிநாட்டில் இருக்கின்றனர். எனவே, முதலீடுகள் செய்வதன் மூலம் எமது பிரதேசத்தில் உள்ளவர்களுக்கு தொழிலை வழங்கி எமது பாரம்பரியத்தை முன்னெடுத்து செல்ல முடியும்"- என்றார்.

# இந்திய மீனவர்களின் வருகையை கட்டுப்படுத்த முயற்சிக்கவில்லை!

## இந்திய அரசு மீது குற்றச்சாட்டு

மன்னார், ஜன. 07

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைகின்ற இந்திய மீனவர்களின் வருகையை கட்டுப்படுத்த இலங்கை அரசும் குறிப்பாக கடற்படையும் தொடர்ந்து துரித நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்ற போதும் இந்திய அரசு தமது மீனவர்களை எல்லை தாண்டாது இருக்க எவ்வித நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவில்லை என்று வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் செயலாளர் என்.எம். ஆலம் தெரிவித்தார்.

மன்னாரில் உள்ள அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகச் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இந்திய மீனவர் விடயங்கள் தொடர்பாகவும் அவர்களின் அத்துமீறிய வருகை தொடர்பாகவும் நீண்ட காலமாக நாங்கள் அவர்களின் அத்துமீறிய வருகையை தடுப்பதற்காக போராட்டங்களை மேற்கொண்டு இருக்கின்றோம்.

பேச்சுவார்த்தைகளை நடத்தியிருக்கிறோம். கட்டுப்பாட்டு விடயங்களில் அரசுக்கு அழுத்தங்களை கொடுத்துள்ளோம். ஆனால், இன்று வரை அந்த செயல்பாடு தொடர்ந்த வண்ணமே உள்ளது.

இலங்கை அரசும் கடற்படையும் இந்திய மீனவர்களின் வருகையை கட்டுப்படுத்த நினைத்தாலும் மறுபுறம் தமிழ்நாடு அரசானது ஒத்துழைப்பை வழங்குவதில்லை. அண்மையில் இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்ட போது தமிழக முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் மத்திய வெளிவிவகார அமைச்சருக்கு கடிதம் எழுதினார். இந்திய மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்படுகின்ற சம்பவங்கள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

கைது செய்யப்பட்ட மீனவர்கள் விடுவிக்கப்பட வேண்டும் என்ற கருத்தை அவர் முனவைத்திருந்தார்.

அவர் எதிர்கால அரசியலை மையமாக வைத்து இந்த ஆண்டில் வரக்கூடிய தமிழ்நாடு சட்டமன்ற தேர்தலை மையப்படுத்தியதாக அவரது செயல்பாடுகள் உள்ளன.

ஆனால், ஒரு தரம் கூட அவர் தமிழக மீனவர்கள் இலங்கை கடல் எல்லைக்குள் செல்வதை தடுப்பதற்கான எந்த அறிவிப்புகளையும் கொடுத்ததாக இல்லை." - என்றார். (எ)

# கட்டு துவக்கில் சிக்கிய குடும்பஸ்தர் படுகாயம்

யாழ்ப்பாணம், ஜன. 07

வடமராட்சி கிழக்கு சுண்டிக்குள பகுதியில் கட்டு துவக்கு வெடித்து நபர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருகையில், வடமராட்சி கிழக்கு சுண்டிக்குள பகுதியில் அமைந்துள்ள சிறு கடலில் நேற்று முன்தினம் இறால் பிடிப்பதற்காக கேவில் பகுதியைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் சென்றுள்ளார்.

இதன்போது அங்கு மிருகங்களை வேட்டையாடுவதற்கு பொருத்தப்பட்டிருந்த கட்டு துவக்கு வெடித்ததில் குடும்பஸ்தர் சிக்கினார்.

இவ்வாறு காயமடைந்தவர் உடனடியாக பளை மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

க. பத்மநாதன் என்னும் குடும்பஸ்தரே இவ்வாறு கட்டு துவக்கில் சிக்கி காயமடைந்தவராவார்.

அண்மைக் காலமாக சட்ட விரோதமாக மிருகங்களுக்கு வைக்கப்படும் வெடி மருந்துகளில் சிக்கி பொதுமக்கள் காயமடைந்த சம்பவங்களும் சுண்டிக்குளம் பகுதியில் பதிவாகிய நிலையில் மீண்டும் ஒரு சம்பவம் இடம்பெற்றுள்ளது இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மருதங்கேணி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)


# பருத்தித்துறை மருத்துவமனை வீதியில் கனரக வாகனங்கள் பயணிக்கத்தடை

யாழ்ப்பாணம், ஜன. 07

மந்திகையில் அமைந்துள்ள பருத்தித்துறை ஆதார மருத்துவமனை வீதியால் கனரக வாகனங்கள் பயணிக்கத் தடைவிதிக்க வேண்டும் என்ற பிரேரணை பருத்தித்துறை பிரதேச சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டிருந்தது.

இந்தத் தீர்மானத்துக்கமைய நேற்று முன்தினம் முதல் குறித்த வீதியில் கனரக வாகனங்கள் செல்வதற்கு முற்றாக தடைவிதித்து பருத்தித்துறை பிரதேச சபையால் அறிவித்தல் பலகை நாட்டிவைக்கப்பட்டுள்ளது.(எ)

# சபரிமலை யாத்திரைக்கான விசேட வழிபாடு



வவுனியா, ஜன. 07

வவுனியா, திருநாவற்குளம் சபரீசன ஐயப்பன் மண்டபத்தில் சபரிமலை வாசன் தீர்த்த யாத்திரை குழுவினர் சபரிமலை யாத்திரையை நேற்று முன்தினம் ஆரம்பித்தனர்.

இதன்போது மணி குருசாமியால் ஐயப்பனுக்கு விசேட பூஜைகள் நடைபெற்றன.

இந்த விசேட வழிபாட்டில் ஐயப்பன் சுவாமிகள், ஐயப்பன் அடியார்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவிரோத மதுபானத்தை அருந்திய ஐவர் உயிரிழப்பு!

## வென்னப்புவவில் துயரச் சம்பவம்

கொழும்பு, ஜன. 07

**வென்னப்புவ - மாரவில பகுதியில் சட்டவிரோத மதுபானத்தை அருந்தியதாகக் கூறப்படும் சம்பவத்தில் குறைந்தது ஐந்து பேர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.**

சட்டவிரோத மதுபானம் அருந்தி இறந்ததாக சந்தேகிக்கப்படும் மூன்று நபர்களின் உடல்கள் அப்பகுதியில் உள்ள ஒரு வீட்டுக்குள் கண்டெடுக்கப்பட்டதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

மேலும், ஆபத்தான நிலையில் இருந்த மேலும் இருவர் சிகிச்சைக்காக வென்னப்புவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

ஆனால் பின்னர் அவர்கள் சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

மரணத்திற்கான சரியான காரணம் மற்றும் சந்தேகிக்கப்படும் சட்டவிரோத மதுபானத்தின் மூலத்தைக் கண்டறிய மாரவில பொலிஸார் சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளைத் தொடங்கியுள்ளனர். (அ)

# கணக்காய்வாளர் நாயகம் நியமனம் இழுபறி; கோப் குழுக் கூட்டங்களில் நடைமுறை சிக்கல்

கொழும்பு, ஜன. 07

கணக்காய்வாளர் நாயகத்தின் பிரதிநிதி யார் என்பது தொடர்பான குழப்பம் காரணமாக, பாராளுமன்றத்தின் முக்கிய கண்காணிப்பு குழுவான கோப் குழு கூட்டங்களில் நடைமுறை சிக்கல்கள் ஏற்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

கணக்காய்வாளர் நாயகம் பதவி காலியாக இருந்தாலும், அரச பொது நிறுவனங்கள் குழு மற்றும் பொது கணக்குகள் குழு கூட்டங்கள் நடைபெறுவதற்கு எந்தவித அரசியல் சட்ட அல்லது நடைமுறை தடையும் இல்லை என பாராளுமன்றச் செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கணக்காய்வாளர் நாயகத்தின் செயற்பாட்டு அல்லது துணை அதிகாரிகள் இக்குழு கூட்டங்களில் பங்கேற்க அனுமதி பெற்றிருந்தாலும், தற்போது யார் பிரதிநிதியாக கலந்துகொள்ளவேண்டும் என்பது குறித்த தெளிவின்மை காரணமாக அவர்கள் கூட்டங்களில் பங்கேற்க தயக்கம் காட்டி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"கணக்காய்வாளர் நாயகம் இல்லாதது பிரச்னை அல்ல. ஆனால் அவரின் துறையை யார் பிரதிநிதித்துவப்படுத்த வேண்டும் என்ற குழப்பமே தற்போது உள்ள ஒரே சிக்கல்" என பாராளுமன்றச் செயலக வட்டாரம் குறிப்பிட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக, கணக்காய்வாளர் நாயகம் பதவி வெற்றிடமாக உள்ள நிலையில் இரண்டு குழுக் கூட்டங்களை நடத்த முடியுமா என்பது குறித்து விளக்கம் கோரி, எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகம் பாராளுமன்றச் செயலாளர் நாயகத்திற்கு அண்மையில் கடிதம் அனுப்பியுள்ளது.

இதற்கிடையில், நிரந்தர கணக்காய்வாளர் நாயகத்தை நியமிப்பதில் ஏற்பட்டுள்ள தாமதம் காரணமாக, ஜனாதிபதி முன்வைத்த நான்கு தகுதியான நியமனங்களை அரசமைப்பு பேரவை நிராகரித்துள்ளதாக அரசாங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

அந்த நியமனங்களில், துறையின் மூத்த அதிகாரிகள் இருவர் உட்பட நான்கு பட்டய கணக்காளர்கள் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# வீட்டிற்கு தீ வைத்தார் தந்தை! அவரும் மகளும் உயிரிழப்பு!!

கொழும்பு, ஜன. 07

அனுராதபுரம், நுவரகம் கொலனி, படிகாரமடுவ பகுதியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற தீ வைப்புச் சம்பவத்தில் தந்தை மற்றும் 13 வயது மகள் உயிரிழந்துள்ளதோடு, மேலும் நால்வர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக கலென்பிந்துனுவெள பொலிஸார் தெரிவித்தனர்.

குடும்பத் தகறாறு காரணமாக தந்தை வீட்டை தீயிட்டமையின் காரணமாகவே இந்த சம்பவம் பதிவாகியுள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

இந்த தீ விபத்தில் வீட்டுக்கு தீயிட்ட தந்தையும் அவருடைய மகளும் உயிரிழந்துள்ளதுடன் உயிரிழந்தவரின் மனைவி, மனைவியின் தாயார், மூத்த மகள் மற்றும் மகன் ஆகியோர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கலென்பிந்துனுவெள பொலிஸார் இச்சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ)

# புதிதாக வந்த பாடநூல்களில் குறைபாடுகள் இருக்கக்கூடும்

கொழும்பு, ஜன. 07

புதிதாக தயாரிக்கப்பட்ட பாடசாலை பாடநூல் தொகுதிகளில் சில குறைபாடுகள் இருக்கக்கூடும் என கல்வி அமைச்சு ஏற்றுக்கொண்டுள்ளது.

இது தொடர்பில் கிடைக்கக் கூடிய விருப்பங்களை ஆய்வு செய்து, அதற்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும் என கல்வி அமைச்சின் செயலாளர் நாலக கலுவெல தெரிவித்துள்ளார்.

பாடநூல்கள் தயாரித்தல் மற்றும் அங்கீகரித்தல் தேசிய கல்வி நிறுவனத்தின் பொறுப்பில் உள்ளதால், கல்வி அமைச்சால் உடனடியாக இறுதி முடிவுகளை எடுக்க முடியாது எனவும் அவர் விளக்கினார்.

இருப்பினும், பிரச்னை இருப்பதை அமைச்சு ஏற்றுக்கொள்வதாகவும், அதற்கு தீர்வு காணப்படவேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

சமீபத்தில், 6ஆம் வகுப்பு ஆங்கில பாடநூலில் பொருத்தமற்ற இணையத்தள குறிப்பு இடம்பெற்றதைத் தொடர்ந்து, அந்த நூலின் விநியோகம் உடனடியாக நிறுத்தப்பட்டது.

இதனையடுத்து, இலங்கை ஆசிரியர் சங்கம், புதியதாக தயாரிக்கப்பட்ட பிற பாடநூல் தொகுதிகளிலும் சிக்கல்கள் இருப்பதாக சுட்டிக்காட்டி, முழுமையான மீளாய்வு அவசியம் என வலியுறுத்தியுள்ளது.

ஆசிரியர்கள் பல பாடங்களில், குறிப்பாக கியூ.ஆர். குறியீடுகள் உள்ள பகுதிகளில் பிரச்னைகள் இருப்பதாக தெரிவித்துள்ளதாகவும், சில குறியீடுகள் தேவையற்ற உள்ளடக்கங்களுக்கு வழிநடத்துவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விவகாரம் தொடர்பில் விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், குற்றப் புலனாய்வு திணைக்களத்திலும் முறையீடு செய்யப்பட்டுள்ளது. (அ)

# ஹரின் பெர்னாண்டோவுக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு!

கொழும்பு, ஜன. 07

கடந்த பொதுத் தேர்தலின் போது தேர்தல் சட்டங்களை மீறியதாகக் கூறப்படும் வழக்கு தொடர்பாக முன்னாள் அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ நேற்று காலை பதுளை நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலையானார்.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, பதுளை நீதவான் மே 05 ஆம் திகதி அதை மீண்டும் விசாரிக்க உத்தரவிட்டார்.

இந்த விவகாரம் தொடர்பாக கடந்த ஆண்டு நவம்பர் 20 ஆம் திகதி பதுளை தலைமையக பொலிஸாரால் ஹரின் பெர்னாண்டோ கைது செய்யப்பட்டார்.

பின்னர், அதே நாளில் பதுளை நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட பின்னர் ரூ. 500,000 ரொக்கப் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

பொதுத் தேர்தல் பிரசாரக் காலத்தின் இறுதி நாளில் பதுளை நகரில் நடத்தப்பட்ட அங்கீகரிக்கப்படாத ஊர்வலம் தொடர்பான குற்றச்சாட்டுகள், தேர்தல் விதிமுறைகளை மீறியதாகக் கருதப்பட்டன. (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “கிழக்கு மாகாணத்தில் 2,700 பிரதேசங்கள் தொல்பொருள் இடங்களாக அடையாளம்”

மட்டக்களப்பு, ஜன. 07

கிழக்கு மாகாணத்தில் 2,700 பிரதேசங்களை தொல்பொருள் இடங்களாக அடையாளப்படுத்தி உள்ளனர். இதில், மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள மண்முனை தென் எருவில் பற்று பிரதேசத்தில் 19 இடங்களையும் போரதீவுப் பற்று பிரதேசத்தில் 34 இடங்களையும் அடையாளப்படுத்தியுள்ளனர்-

இவ்வாறு பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு- போரதீவுப் பற்று பிரதேசத்தின் கண்ணபுரம் கிராம மக்களுடன் நேற்று முன்தினம் நடைபெற்ற சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

“தொல்பொருள் திணைக்களம் போரதீவுப் பற்று பிரதேசத்துக்கு அண்மையில் வந்த நேரத்தில் அவர்கள் கொண்டு வந்த பதாகைகளை நிறுவுவதற்கு அம்மக்கள் விடவில்லை. அவ்வாறு மக்கள் விட்டிருந்தால் அது தொல்பொருள் திணைக்களத்தால் அடையாளப்படுத்தப்பட்ட இடமாக மாறியிருக்கும். எதிர்ப்பு தெரிவித்த எமது மக்கள் 55 பேர் மீது வழக்கு போட்டுள்ளனர். இது எமது தமிழினத்துக்காக இந்த கண்ணபுரம் மக்கள் எடுத்துக்கொண்ட மாபெரும் பணியாகும்.

ஆயுதத்தை வைத்து போராடிய ஓர் இனம் நாங்கள். தற்போதைய நிலையில் ஆயுதம் இல்லை. நாங்கள் ஜனநாயக ரீதியில் எங்களுடைய உரிமைப் போராட்டத்தை மேற்கொண்டு வருகின்றோம். போராட்டத்தின் வடிவம் மாறியிருந்தாலும் அனைவரும் ஒன்றாக சேர்ந்து செயல்படுகின்றோம்.

மக்கள் அன்றைய தினம் மழையையும் பொருட்படுத்தாமல் ஜனநாயக போராட்டம் செய்த காரணத்தால்தான் இந்த பிரதேசத்தில் தொல்பொருள் துணைக்களம் எனும் அடையாளப்படுத்தப்பட்ட பதாகைகள் போடப்படவில்லை. அவ்வாறு அவர்கள் பதாகைகளை இட்டு தொல்பொருள் இடம் என அடையாளப்படுத்தியிருந்தால் அதன் பின் அப்பகுதிக்குள் எமது மக்கள் சென்று ஒரு சிறிய வேலையைகூட செய்ய முடியாமல் போகும். அங்கு இருக்கின்ற ஆலயத்தில் ஒரு சிற்பத்தை மாற்ற வேண்டும் என்றால்கூட தொல்பொருள் திணைக்களத்தின் அனுமதியை பெறாமல் அதனை மாற்ற முடியாது. மாறாக அவர்கள் அனுமதியை தரவும் மாட்டார்கள். அவ்வாறு அனுமதி இல்லாமல் அப்பகுதிக்குள் உள்நுழைந்து அதனை தொட்டால்கூட வழக்கு போடாமல் நேரடியாகவே சிறைச்சாலைக்கு அனுப்புவார்கள். பிணைகூட வழங்க மாட்டார்கள்.

இலங்கையில் இரண்டு பாரிய சட்டங்களுக்கு பிணையில்லை. ஒன்று பொதுச்சொத்து சட்டம், மற்றையது தொல்பொருள் சட்டம்.

தற்போதைய நிலையில் கொலை செய்தவர்கள் கொள்ளையடித்தவர்கள், கஞ்சா கடத்தியவர்கள், போதைப்பொருள் கடத்தியவர்கள் இருக்கிறார்கள். எங்களுடைய மாவட்டத்திலும் அவ்வாறான வேலைகளை செய்தவர்கள் சிறைச்சாலைக்குள் இருக்கிறார்கள். இவ்வாறு கொடூரமான குற்றங்களைச் செய்தவர்களைகூட பொலிஸ் குழுக்களை அமைத்து தீவிரமாக தேடவில்லை. ஆனால், தொல்பொருள் தொடர்பில் செயல்பட்ட எமது தவிசாளர்களை பொலிஸார் தேடினார்கள். இந்த நிலையில், தொல்பொருள் திணைக்களத்தினரின் செயல்பாடுகளுக்கு எதிராக எமது மக்களை எமது தலைவர்கள் சரியான முறையில் வழிநடத்தி எதிர்ப்பு வெளியிட்டு அவர்களை அனுப்பி வைத்துள்ளனர்.

பிரதேச சபையில் அனுமதி பெற்ற பின்னர் பதாகைகளை நடுமாறு நீதிமன்றம் எனக்கு ஒரு தீர்ப்பை தந்துள்ளது. இனிமேல் தொல்பொருள் திணைக்களம் இப்பகுதியில் பதாகைகளை நடுவதற்கு வருவதாக இருந்தால் பிரதேச சபையில் அனுமதி பெற்ற பின்னரே வர முடியும்.

எதிர்காலத்தில் ஜனாதிபதி வரைக்கும் இந்த செய்தி செல்லக்கூடிய வகையில் மாபெரும் ஜனநாயக போராட்டம் ஒன்றை நடத்துவதற்கு தீர்மானித்துள்ளோம்.”- என்றார். (எ)

# பிக்குகளின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்த முடியவில்லை

## சிறிநேசன் எம். பி. கவலை

மட்டக்களப்பு, ஜன. 07


எமது நாட்டு சட்டங்களால் பௌத்த பிக்குகளின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்த முடியவில்லை என்று மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஞா. சிறிநேசன் தெரிவித்துள்ளார்.

உலகில் ஜனநாயகமும் இறைமையும் கேள்விக் குறியாகவும் கேவலப் பொருட்களாகவும் மாறியுள்ளன. வெனிசுலா ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோவும் அவரது மனைவியும் இறைமையுள்ள சொந்த நாட்டில் சொந்த வீட்டில் உறக்கத்தில் இருந்தனர்.

வல்லரசு நாடான அமெரிக்க ஜனாதிபதியின் படைகள் வான் தாக்குதலை மேற்கொண்டு அழிவுகளை ஏற்படுத்திய பின்னர் ஜனாதிபதியையும் அவரது மனைவியையும் கைது செய்து அமெரிக்காவுக்கு கொண்டு சென்றுள்ளனர். இங்கு சர்வதேச சட்டம், நாட்டின் இறைமை என்பதெல்லாம் கேள்விக்கு உள்ளாகியுள்ளன என்றும் சிறீநேசன் குறிப்பிட்டுள்ளார்.

“வல்லவன் வாழ்ந்தான் வலுவிழந்தவன் வீழ்ந்தான்” என்ற வலுவான வாக்கு பலிதமாகியுள்ளது. சர்வதேச சட்டங்கள் அமெரிக்காவுக்கு விதிவிலக்காகியுள்ளன. எமது நாட்டு சட்டங்களால் பௌத்த பிக்குகளின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்த முடியாதுள்ளது. இது எமது உள்நாட்டில் காணப்படுகிறது என்று நேற்று ஊடகங்களுக்கு அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளார். (எ)

# கிழக்கு மாகாண ஆளுநர் செயலக செயலாளராக வாகீசன் நியமனம்



திருகோணமலை, ஜன. 07

நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சில் பணியாற்றி வந்த பி. வாகீசன், கிழக்கு மாகாண ஆளுநர் செயலக செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். இவருக்கான கடிதத்தை கிழக்கு மாகாண ஆளுநர் ஜயந்தலால் ரத்னசேகர நேற்று முன்தினம் திருகோணமலையில் உள்ள ஆளுநர் அலுவலகத்தில் வைத்து வழங்கினார்.

இவர், நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சில் பணியாற்றி வந்த நிலையில், கிழக்கு மாகாண ஆளுநர் செயலக செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். (எ)



# திருகோணமலை வீரநகர் பகுதியில் கடலரிப்பால் மூன்று வீடுகள் சேதம்

திருகோணமலை, ஜன. 07

திருகோணமலை பட்டனமும் சூழலும் பிரதேச செயலகத்துக்குட்பட்ட வீரநகர் கரையோர பகுதியில் கடும் சீரற்ற காலநிலை காரணமாக நேற்று முன்தினம் மூன்று வீடுகள் தாழிறங்கியுள்ளன.

இந்த வீடுகளில் வசித்த 19 பேர் உறவினர்களின் வீடுகளில் வசித்து வருகின்றனர். தொடர்ந்தும் கடல் அலை தாக்கம் காரணமாக குறித்த வீடுகள் மேலும் பாதிப்பை சந்திக்கும் என பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்தனர். எதிர்வரும் காலங்களில் இவ்வாறான சீரற்ற காலநிலை மோசமடையலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எனவே, தங்களுக்கு நிவாரணம் வழங்குமாறும் உரிய அதிகாரிகளிடம் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இவ்வாறான நிலையில் இது குறித்து திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ச. குகதாசன், மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம், திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலாளர் ஊடாக கலந்துரையாடி நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்வதாக தெரிவித்தார். (எ-12)

# முதலை இழுத்துச் சென்ற குடும்பஸ்தரின் சடலம் மீட்பு

ஒலுவில், ஜன. 07

ஆற்றில் மீன் பிடித்துக் கொண்டிருந்த இளம் குடும்பஸ்தரை முதலை இழுத்துச் சென்ற நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

அம்பாறை, ஒலுவில் - ஆத்தியடிக்கட்டு ஆற்றில் மீன் பிடித்துக் கொண்டிருந்த போது திடீரென முதலையொன்று இளம் குடும்பஸ்தரை இழுத்துச் சென்றது.

தேடுதல் மேற்கொள்ளப்பட்ட நிலையில் இளம் குடும்பஸ்தரின் சடலம் நேற்று முன்தினம் மாலை மீட்கப்பட்டது.

ஒலுவில்-1, அஷ்ரப் நகர்-12 பகுதியை சேர்ந்த 38 வயது இரண்டு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.

குறித்த ஆற்றில் மூவர் மீன் பிடிக்க சென்ற நிலையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. (எ)

# குப்பை பிரச்னைக்கு எதிராக வர்த்தகர்கள் ஆர்ப்பாட்டம்



பொகவந்தலாவ, ஜன. 07

பொகவந்தலாவ நகரில் காணப்படும் குப்பைகளை சேகரிக்க நோர்வூட் பிரதேச சபை அதிக வரி அறவிடுவதாக தெரிவித்து நுவரெலியா- பொகவந்தலாவ வர்த்தகர்கள் நேற்றுக் காலை ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தனர். பொகவந்தலாவ நகரில் உள்ள அனைத்து வர்த்தக நிலையங்களையும் மூடி இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர். இதில், 200 பேர் வரை கலந்து கொண்டதோடு சுமார் ஒரு மணி நேரம் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

“எடுக்காதே எடுக்காதே குப்பை வரி எடுக்காதே. கட்டமாட்டோம் கட்டமாட்டோம் குப்பைக்கான வரியை கட்டமாட்டோம். நாங்கள் செலுத்தும் வரிக்கு என்ன பயன். மேலும், ஒரு வரிச்சுமையா குப்பைக்கு?” போன்ற பாதைகளையும் கோஷங்களையும் எழுப்பி ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர். (எ)

# வட்டவளை- நாவலப்பிட்டி இடையே பயணிகள் ரயில் சேவை ஆரம்பம்

நுவரெலியா, ஜன. 07

வட்டவளையிலிருந்து நாவலப்பிட்டிக்கான பயணிகள் ரயில் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது.

நாட்டில் நிலவிய மோசமான காலநிலை காரணமாக மலையகத்தில் ரயில் பாதைகளுக்கு ஏற்பட்ட கடுமையான சேதம் காரணமாக சேவை நிறுத்தப்பட்டிருந்தது.

தொடர்ந்து பாடசாலை முதலாம் தவணை நேற்று முன்தினம் ஆரம்பமானதோடு மாணவர்கள் நலன் கருதியும் அலுவலக ஊழியர்களின் நலன் கருதியும் ரயில் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதன்படி, காலை 05: 15 மணிக்கு வட்டவளை ரயில் நிலையத்திலிருந்து பயணத்தை ஆரம்பிக்கும் ரயில் காலை 06: 30 மணிக்கு நாவலப்பிட்டி ரயில் நிலையத்தை அடையும்.

மேலும், பிற்பகல் 02: 15 மணிக்கு மீண்டும் நாவலப்பிட்டியிலிருந்து வட்டவளை ரயில் நிலையத்துக்கு சேவையை நடத்த ரயில்வே கட்டுப்பாட்டு அறை நடவடிக்கை எடுத்துள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் நாட்களில் இந்த ரயிலை ஹற்றன் ரயில் நிலையம் வரை இயக்கத் திட்டமிடப்பட்டுள்ளது என்று நாவலப்பிட்டி ரயில் நிலைய அதிகாரி தெரிவித்தார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாயாறு பால திருத்த பணி இன்றுடன் நிறைவடையும்

முல்லைத்தீவு, ஜன. 07
நாயாறு பாலத்தின் திருத்தப் பணிகள் பெரும்பாலும் நிறைவடைந்துள்ளன. எஞ்சியுள்ள பணிகளும் இன்றுடன் நிறைவடையும் என்று முல்லைத்தீவு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

தற்போதைய நிலைமைகளை கருத்தில் கொண்டு வீதி அபிவிருத்தி அதிகார சபை நாயாறு பாலம் வழியாக பொதுமக்கள் பயணிப்பதற்கு அனுமதி வழங்கியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## தேர்தல்...

அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

பிராந்தியத்தில் மிகக்குறைந்த மின்சார கட்டணங்களைக் கொண்ட நாடுகளில் ஒன்றாக இலங்கையை மாற்றுவதற்கு, எண்ணெய் சார்ந்த மின் உற்பத்திக்குப் பதிலாக குறைந்த விலை கொண்ட சூரிய சக்தி, காற்றாலை மற்றும் நீர் மின் நிலையங்கள் போன்ற புதுப்பிக்கத்தக்க மூலங்களை நோக்கித் திரும்புதல், சூரிய சக்தி மூலம் மின்சார உற்பத்தியை படிப்படியாக அதிகரிக்கும் முகமாக தமது கொள்கையையும் வடிவமைத்துள்ள தற்போதைய அரசாங்கம், ஆட்சிக்கு வந்த பிற்பாடு, மின்சார கட்டணங்களைக் குறைத்து, மக்கள் மீதான பொருளாதார அழுத்தத்தைக் குறைப்போம் என்ற தேர்தல் வாக்குறுதிகளை கைவிட்டுள்ளது.

மக்கள் அபிலாசைகளை கிடப்பில் போட்டு எடுத்து வரும் நடவடிக்கைகள் தெளிவாகத் தெரிவதனால், விடயங்களை தெளிவுபடுத்திக் கொள்வதற்காக அரசாங்கத்திடம் பின்வரும் கேள்விகளை எழுப்புகிறேன்.

2026 ஆம் ஆண்டின் முதல் காலாண்டிற்கான மின்சாரக் கட்டணத்தை 11.57 வீதத்தால் அதிகரிப்பதற்கு இலங்கை மின்சார சபையால், இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளமை இலங்கை மின்சார சபையின் இழப்புகளை ஈடுகட்டும் நோக்கிலா ?

இவ்வாறு மின்சார கட்டணங்களை அதிகரிப்பதன் மூலம், குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் ஈட்டும் குடும்பங்கள், சிறிய தொழில்கள் மற்றும் அரச நிறுவனங்களில் அதிகரித்து வரும் மின்சாரச் செலவுகள் ஏற்படுத்தும் தாக்கம் குறித்து அரசாங்கம் மதிப்பீடு செய்துள்ளனவா? அவற்றை சபையில் சமர்ப்பிக்க முடியுமா?

மின்சார கட்டணத்தை 1:3 ஆகக் குறைப்பதற்கும், மின்சார கட்டணங்களை அறவிடும் ஒழுங்கை வெளிப்படையான முறைமையொன்றிற்கு கொண்டு வருவதற்கும் வழங்கிய தேர்தல் வாக்குறுதிகளை அரசாங்கம் நிறைவேற்றத் தவறிவிட்டமைக்கான காரணங்கள் யாது? இதனால் பொதுமக்களுக்கு ஏற்படும் சிரமத்தை அரசாங்கம் ஏன் புறக்கணித்து வருகின்றது?

அரசாங்கத்தால் முன்வைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள புதிய வலுச்சக்தி கொள்கைக்கு பொதுமக்களின் ஆலோசனைகளைக் கோர விடுத்திருக்கும் காலம் நியாயமானது என்று அரசாங்கம் கருதுகிறதா? முழு நாடும் ஒரு பேரழிவை எதிர்கொண்டுள்ள நேரத்தில் இந்தக் காலத்தை நீடிக்க வேண்டுமல்லவா? புதிய கொள்கை தொடர்பில் தொழில்நுட்ப, நிதி மற்றும் பொருளாதார ரீதியிலான பகுப்பாய்வுகள் நடத்தப்பட்டுள்ளனவா? அவற்றைச் சபையில் சமர்ப்பிக்க முடியுமா?

புதிய வலுச்சக்திக் கொள்கையின் கீழ் தற்போதைய குறுக்கு மானியத்தை நீக்குவதற்கு அரசாங்கம் தயாராகி வருகிறதா? ஆமெனில், இதனால் ஒவ்வொரு துறைக்கும் ஏற்படும் தாக்கம் குறித்து விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளனவா? அவற்றைச் சபையில் சமர்ப்பிக்க முடியுமா?

குறுக்கு மானியங்களை நீக்குவதாக இருந்தால், அது குறித்த ஒப்பீட்டு ரீதியிலான அறிக்கையொன்றை இந்த சபையில் சமர்ப்பிக்க முடியுமா? புதிய வலுச்சக்திக் கொள்கையின் கீழ் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்திக்கான பணம் செலுத்தும் வழிமுறைகளில் பயன்பாட்டு நேரத்தின் அடிப்படையில் மாற்றத்தைக் கொண்டு வர எதிர்பார்க்கிறீர்களா? ஆமெனில் அது தொடர்பில் தொழில்நுட்ப ரீதியிலான ஆய்வு மேற்கொள்ளப்பட்டதா? அதனை சபையில் சமர்ப்பிக்க முடியுமா?

இந்தக் கொள்கையின் மூலம் காற்றாலை, சிறிய நீர் மின்சாரம் உற்பத்தி நிலையம் மற்றும் உயிரி மீள்புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மூலங்களுக்கான அறவீட்டு முறையை மாற்றியமைப்பதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளதா? இந்த மூலங்கள் மூலம் உற்பத்தி செய்யப்படும் ஆற்றலை தேசிய மின் கட்டமைப்புடன் இணைப்பதில் ஏதேனும் வெட்டுக்களைச் செய்வதற்கு அரசாங்கம் எதிர்பார்க்கிறதா? அது எந்த விதத்தில்? இங்கு சட்டப்பூர்வமாக ஒப்பந்தம் செய்யப்பட்ட நிறுவனங்களுக்கு இழப்பீடு வழங்கப்படுமா?

அத்துடன் மின்சார கட்டணத்தை 33 வீதத்தால் குறைப்போம் என்று கூறிய அரசாங்கம் இன்று எரிபொருட்களின் விலையைக்கூட அதிகரித்துள்ளது. திறைசேரி விதிக்கும் வரிகளை நீக்கி துறைமுகத்தில் இறக்குமதி செய்யப்படும் அதே விலையில் எரிபொருளைப் பெற்றுத் தருவோம் என்று கூறிய அரசாங்கம், இன்று மீண்டும் எரிபொருட்களின் விலைகளை அதிகரித்துள்ளது.

அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்தின் கைதியாக மாறியுள்ளது. டித்வா சூறாவளியால் நாடு பாதிக்கப்பட்டிருக்கும் சமயத்தில், இன்று மின்சார கட்டணத்தை அதிகரிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. ஒருபுறம், எரிபொருள் விலையை அதிகரித்துவிட்டு மறுபுறம் தேர்தல் வாக்குறுதிகளைக் கூட இந்த அரசாங்கம் மீறிவிட்டது - என்றார். (ஐ)

## கனமழையும்...

வங்காள விரிகுடாவில் இலங்கையின் பொத்துவிலுக்கு தென்கிழக்கு திசையில் 664 கி.மீ. தொலைவில் காணப்படும் காற்றழுத்த தாழ்வு நிலை வலுப்பெற்று தற்போது நன்கமைந்த காற்றழுத்த தாழ்வு நிலையாக மாறியுள்ளது. இது, வடமேற்கு திசை நோக்கி நகர்ந்து இலங்கையின் கிழக்கு மாகாண கரையோரமாக வடக்கு நோக்கி நகர்ந்து, வடக்கு மாகாணத்தை அண்மித்து மேலும் வடக்கு நோக்கி நகர்ந்து தமிழ்நாட்டை அடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தத் தாழமுக்கமும் இலங்கைக்கு மீண்டும் பாதிப்பை ஏற்படுத்தும் நிலையுள்ளது. தற்போது, வடக்கு, கிழக்கு, வட மத்திய, ஊவா மற்றும் மத்திய மாகாணங்களுக்கு பரவலாக மிதமான மழை கிடைத்து வருகிறது.

நாளை வியாழக்கிழமை முதல் எதிர்வரும் 12ஆம் திகதி வரை வடக்கு, கிழக்கு, ஊவா, வட மத்திய, மத்திய மற்றும் தென் மாகாணங்கள் முழுவதும் மிகமிகக் கனமழை கிடைக்கும் வாய்ப்புள்ளது. பல தாழ்நில பகுதிகளில் வெள்ளம் ஏற்படும் அபாயமுள்ளது.

முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், திருகோணமலை, கிளிநொச்சி, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களில் 8, 9, 10, 11ஆம் திகதிகளில் மிக மிகக் கனமழை கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. குறிப்பாக - முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் நாளை முதல் எதிர்வரும் 11ஆம் திகதி வரை திரட்டிய மழைவீழ்ச்சியாக 450 மி.மீ. க்கு மேல் கிடைக்கும் வாய்ப்புள்ளது.

நாளை முதல் எதிர்வரும் 13ஆம் திகதி வரை வடமேற்கு, மேற்கு, சபரகமுவா மாகாணங்களுக்கு பரவலாக மிதமானது முதல் கனமானது வரை மழை கிடைக்கக்கூடும். இது, தற்போது தாழமுக்கமாகக் காணப்பட்டாலும் இலங்கை கரையை அண்மிக்கும் போது காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெறும் என எதிர்பார்க்கப்படுவதனால் நாளை முதல் கிழக்கு, வடக்கு வடமத்திய ஊவா மாகாணங்களில் காற்றின் வேகம் மணிக்கு 60 கி.மீற்றரை விடக் கூடுதலாக வீசக்கூடும்.

மத்திய மற்றும் ஊவா மாகாணங்களின் பல பகுதிகளுக்கும் கனமழை கிடைக்கும் என்பதனால் நிலச்சரிவு அனர்த்தங்களும் நிகழக்கூடும்.

வடக்கு, கிழக்கு, வட மத்திய, மத்திய, மற்றும் ஊவா மாகாணங்களின் மாகாண, மாவட்ட மற்றும் பிரதேச நிர்வாக அதிகாரிகள் முன்கூட்டியே மக்களுக்கு இந்தக் கனமழை தொடர்பிலும் வெள்ள அனர்த்தங்கள் மற்றும் நிலச்சரிவுகள் தொடர்பிலும் தெரியப்படுத்துவதன் மூலம் பாதிப்புகளைக் குறைக்க முடியும்.

இந்தத் தாழமுக்கத்தை சாதாரண நிகழ்வாகக் கருத வேண்டாம். மிக வேகமான காற்றோடு கூடிய மிகக் கனமழை ( இடி, மின்னலும் இணைந்ததாக) மோசமான பாதிப்புகளை ஏற்படுத்தக்கூடும். மிக முக்கியமாக இது தாழமுக்கம் தாழ்வு மண்டலத்தோடு இணைந்த நிகழ்வு என்பதனால் வழமையை விட கடல் மட்டம் மிக உயர்வாக காணப்படும். ஆகவே, சாதாரண காலங்களில் வெள்ளநீர் கடலுக்குள் செல்வது போல இக்காலத்தில் வெள்ள நீர் கடலுக்கு செல்லாது. ஆகவே, இதனையும் கருத்தில் கொண்டு செயல்படுவது சிறந்தது. (ஐ)

## தனியார்...

ஒய்வு பெற்ற பிறகு ஊழியர்களின் சமூகப் பாதுகாப்புக்காகவே, சேமலாப நிதியம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. எனினும், தனியார் துறை ஊழியர்கள் சேமலாப நிதியை ஒரே தவணையில் பெறும்போது அவர்களின் சமூகப் பாதுகாப்பு ஆபத்துக்கு உள்ளாகிறது.

இதனால், தனியார் துறை ஊழியர்களும் ஒய்வு பெற்றதும் காலம் முழுவதும் ஓய்வூதியம் பெறும் வகையில் ஒய்வூதியத் திட்டம் போன்ற ஒரு முறைமையை அறிமுகப்படுத்த அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது - என்று கூறினார். (ஐ)

## பாம்பு...

இதில், அதே இடத்தைச் சேர்ந்த சிறிகாந்தன் கிருசிகன் (வயது 23) என்பவரே உயிரிழந்தார்.

பாம்புக் கடிக்கு இலக்கானவர் அயலவர்களால் உடனடியாக தருமபுரம் மருத்துவமனையில் சேர்ப்பித்தனர். எனினும், அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டார் என்று மருத்துவர்கள் தெரிவித்தனர்.

இளைஞரின் சடலம் உடல்கூராய்வுக்காக கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை இராமநாதபுரம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## மாகாண...

வேண்டும் என்பது குறித்து இந்தத் தெரிவுக்குழு ஆராயவுள்ளது.

அதன்பின்னர், இது தொடர்பான தனது முன்மொழிவுகளையும் பரிந்துரைகளையும் பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்க வேண்டும் என அந்த குழுவுக்கு பணிக்கப்படும்.

இந்தத் தெரிவுக்குழு நியமிக்கப்பட்டு அதன் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட பின்னர், மாகாண சபைகள் தேர்தல் தொடர்பான அடுத்தகட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ)

## போதை...

கடற்படையினருடன் இணைந்து பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் நேற்று முன்தினம் நடத்திய விசேட நடவடிக்கையிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டனர். (ஐ)

## கச்சதீவு...

கடந்த ஆண்டு திருவிழாவின்போது பக்தர்களுக்கு ஏற்பட்ட அசௌகரியங்கள், இனங்காணப்பட்ட குறைபாடுகளை இந்தமுறை நிவர்த்தி செய்வது குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

அத்துடன், இந்த மாதத்தின் நடுப்பகுதியில், துறைசார் அதிகாரிகளுடன் பிரதேச செயலர் கச்சதீவுக்கு சென்று அங்குள்ள அடிப்படை வசதிகளை ஆய்வு செய்வார். களப் பயணத்தைத் தொடர்ந்து, யாழ். மாவட்ட செயலர் தலைமையில் ஒருங்கிணைப்புக் கூட்டம் நடத்தப்பட்டு, ஒவ்வொரு திணைக்களத்துக்குமான பணிப்பொறுப்புகள் அதிகாரபூர்வமாக பகிர்ந்தளிக்கப்படும் - என்று தெரிவிக்கப்பட்டது.

இதேபோன்று, இந்தமுறை திருவிழாவுக்கு தமிழ்நாட்டிலிருந்து அதிகளவில் பக்தர்கள் வருகை தருவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ)

## தொல்பொருள்...

மேற்கண்டவாறு கூறினார்.

வடக்கு, கிழக்கில் தொல்பொருள் திணைக்களத்தின் செயல்பாடுகளை கண்டித்து போராட்டங்களை நடத்தத் தயாராகி வருகிறோம். இதற்கு மக்கள் ஒத்துழைப்பை நல்க வேண்டும். போராட்டம் எங்கே? எப்போது நடைபெறும் என்பதை போராட்டத்துக்கு ஒரு சில நாட்கள் முன்னதாக அறிவிப்போம்.", - என்றார். (ஐ)

(தொடர்புடைய செய்தி பக்கம் 6இல்)

## மட்டக்களப்பில்...

அதிகரித்துள்ளதாகவும் பல சிறிய குளங்கள் முழு கொள்ளவை ஏற்கனவே எட்டிவிட்டன என்றும் அறிய வருகிறது. (ஐ)

## 72 ஆயிரம்...

வெற்றிடங்களை நிரப்புவதற்கு தேவையான ஒப்பு தலையும் 2 ஆயிரம் கோடி ரூபாய் நிதியையும் அரசாங்கம் ஏற்கனவே ஒதுக்கியுள்ளது.

பொருளாதார மேம்பாடு மற்றும் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சராக ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க வழங்கிய அறிவுறுத்தல்களுக்கமைய இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. அரச சேவையில் உள்ள அந்தந்த வெற்றிடங்களுக்கு பட்டதாரிகள் கூட போட்டித் தேர்வை எதிர்கொண்ட பின்னரே ஆட்சேர்ப்பு செய்யப்படுவார்கள் - என்றும் அமைச்சர் கொழும்பு ஆங்கில நாளிதழுக்கு கருத்து வெளியிட்டுள்ளார். (ஐ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# 3 ஆண்டுகளில் மின் கட்டணம் மூன்றில் ஒரு பங்காக குறையும்

**அமைச்சர் குமார ஜயக்கொடி உறுதி**



கொழும்பு, ஜன. 07

**வாக்குறுதியளித்தபடி மூன்று ஆண்டுகளுக்குள் மின்சாரக் கட்டணத்தை மூன்றில் ஒரு பங்காகக் குறைக்கும் இலக்கை நோக்கி அரசாங்கம் நகர்ந்து வருவதாக வலுசக்தி அமைச்சர் குமார ஜயக் கொடி நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.**

2024 ஆம் ஆண்டில் ஒரு மின் அலகின் சராசரி உற்பத்திச் செலவு 37 ரூபாவாக இருந்தது. தற்போது இந்தச் செலவு 29 ரூபாவாகக் குறைந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

மின் அலகின் சராசரிச் செலவை 25 ரூபாவாகக் குறைக்க அரசாங்கம் இலக்கு நிர்ணயித்துள்ளது. இந்த இலக்கை எட்டினால், மின்சாரக் கட்டணத்தை ஒட்டுமொத்தமாக 32 சதவீதத்தால் குறைக்க முடியும் என அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர், 2024 ஜூலை மாதம் மின் அலகு ஒன்றின் விலை 37 ரூபாவாக இருந்தபோது, மூன்று ஆண்டுகளுக்குள் மின்சாரக் கட்டணத்தை 30 சதவீதத்தால் குறைப்பதாக தேசிய மக்கள் சக்தி உறுதியளித்ததை நினைவு கூர்ந்தார்.

2026 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டில் ஏற்படக்கூடிய 13,094 மில்லியன் ரூபா பற்றாக்குறையை ஈடுகட்ட, மின்சாரக் கட்டணத்தை 11.57 சதவீதத்தால் அதிகரிக்குமாறு இலங்கை மின்சார சபை முன்மொழிந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## கல்வி அமைச்சர் பதவியிலிருந்து பிரதமர் உடனே விலக வேண்டும்!

**உதய கம்மன்பில கோரிக்கை**



கொழும்பு, ஜன. 07

பிரதமர் ஹரிணி அமரசூரிய கல்வி அமைச்சராக பதவி வகித்துக் கொண்டு தரம் 6 பாடப்புத்தகத்தின் சர்ச்சைக் குரிய விடயம் தொடர்பில் முறையான விசாரணைகள் இடம்பெறுமா என்பது சந்தேகத்துக்குரியது. பிரதமர் கல்வி அமைச்சு பதவியில் இருந்து உடன் விலக வேண் டும் என பிவிதுறு ஹெல உறுமய கட்சியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரி வித்தார்.

கொழும்பில் உள்ள என்.எம். பெரேரா மத்திய நிலையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்-

புதிய கல்வி கொள்கையை அமுல்படுத்துவதாகக் குறிப்பிட்டுக் கொண்டு அரசாங்கம் நாட்டின் கலாசாரம் மற்றும் பாரம்பரியத்துக்கு எதிராக செயற்படுகிறது. ஆறாம் தர பாடப்புத்தகத்தில் சர்ச்சைக்குரிய வகையில் இணைக்கப்பட்டிருந்த வலைத்தளத்தின் முகவரி தற்போதைய பிரதான பேசுபொருளாக காணப்படும்.

வெளிநாடுகளில் புகையிரதம் விபத்துக்குள்ளானாலே போக்குவரத்து அமைச்சர் பதவி விலகுவார். ஆனால் இலங்கையில் அவ்வாறான பழக்கம் கிடையாது. பாடசாலை புத்தகத்தில் இவ்வாறான பாரதூரமான தவறு இடம்பெற்றுள்ள நிலையில் பிரதமர் ஹரிணி அமரசூரிய கல்வி அமைச்சர் பதவியை துறக்கவில்லை.

மாறாக தேசிய கல்வி நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம் பதவி விலகியுள்ளார். அரசாங்கத்தின் முறையற்ற செயற்பாடுகள் வெளிவந்ததன் பின்னர் அரச அதிகாரிகள் மீது பழி சுமத்துவதும், அவர்கள பதவி விலக்குவதும் தற்போது புதிய பழக்கமாகி விட்டது.

பிரதமர் ஹரிணி அமரசூரிய கல்வி அமைச்சராக பதவி வகிக்கும் வரையில் இந்த சம்பவம் தொடர்பில் முறையான விசாரணைகள் இடம்பெறுமா என்பது சந்தேகத்துக்கிடமானது. ஆகவே பிரதமர் கல்வி அமைச்சு பதவியில் இருந்து உடன் விலக வேண்டும்-என்றார். (அ)

## வெனிசுலா நிலவரம் குறித்து இலங்கை அரசு ஆழ்ந்த கவலை

கொழும்பு,ஜன. 07

வெனிசுலா நிலைவரம் தொடர்பில் இலங்கை அரசு ஆழ்ந்த கவலையை வெளியிட்டுள்ளதுடன், நிலைமையை உன்னிப்பாகக் கண்காணித்து வருவதாகவும் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக இலங்கை வெளிவிவகார அமைச்சு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில், பலத்தைப் பயன்படுத்துவதைத் தடை செய்தல், தலையிடாமை, அனைத்துலக மோதல்களை அமைதியான முறையில் தீர்த்து வைப்பது மற்றும் நாடுகளின் இறையாண்மை மற்றும் பிராந்திய ஒருமைப்பாடு போன்ற, அனைத்துலக சட்டத்தின் கொள்கைகளையும், ஐ.நா. சாசனத்தையும் மதிக்க வேண்டியதன் அவசியத்தை இலங்கை வலியுறுத்துகிறது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

வெனிசுலா மக்களின் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வு மற்றும் பிராந்தியத்தின் உறுதித்தன்மைக்கு இலங்கை மிகுந்த முக்கியத்துவம் அளிக்கிறது.

மேலும், பதற்றத்தைக் குறைத்தல் மற்றும் பேச்சுக்கள் மூலம் அமைதியான தீர்வுக்கு முன்னுரிமை அளிக்க அனைத்து தரப்பினரையும் அழைக்கிறது.

இந்த முக்கியமான கட்டத்தில், ஐக்கிய நாடுகள் சபையும் ஐ.நா. பாதுகாப்பு சபை போன்ற அதன் அமைப்புகளும் இந்த விடயத்தை கையிலெடுத்து, வெனிசுலா மக்களின் பாதுகாப்பு, நல்வாழ்வு மற்றும் இறையாண்மை உரிமைகளைக் கருத்தில் கொண்டு அமைதியான தீர்வை நோக்கிச் செயற்படுவது முக்கியம்," என்றும் மேற்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## தொழிற்சங்கப் போராட்டம் குறித்து தீர்மானிக்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் கூட்டம் இன்று!

கொழும்பு, ஜன. 07

சுகாதாரத் துறையில் நிலவும் நீண்டகாலப் பிரச்னைகளைத் தீர்ப்பது தொடர்பாக வழங்கப்பட்ட எழுத்து பூர்வ உடன்படிக்கைகளை அரசாங்கம் அமுல்படுத்தத் தவறியுள்ளதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் குற்றம் சாட்டியுள்ளது.

இது குறித்த அடுத்தகட்ட தீர்மானங்களை மேற்கொள்வதற்காக இன்று விசேட மத்திய குழுக் கூட்டமொன்றுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சினால் ஏற்கனவே இணக்கம் தெரிவிக்கப்பட்ட பல முக்கிய கோரிக்கைகள் இதுவரை நிறைவேற்றப்படவில்லை என சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

குறிப்பாக டாட் கொடுப்பனவை உரிய முறையில் இற்றைப்படுத்துதல், போக்குவரத்து தொடர்பான 22/99 சுற்றறிக்கை பிரச்னைகளுக்குத் தீர்வு காணுதல், மேலதிக கடமை நேரக் கொடுப்பனவை நிரந்தரப் பலனாக மாற்றுதல், மருத்துவத் துறைக்கெனத் தனியான இலங்கை மருத்துவ சேவையை நிறுவுதல் போன்ற வாக்குறுதிகள் காற்றில் பறக்கவிடப்பட்டுள்ளதாக மருத்துவர்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

நிதியமைச்சுடன் நேற்று முன் தினம் முதல் ஆரம்பிக்கப்படவிருந்த பேச்சுவார்த்தைகள், சுகாதார அமைச்சின் மெத்தனப்போக்கினால் தடைப்பட்டுள்ளதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

காலக்கெடு நிர்ணயிக்கப்பட்ட உடன்படிக்கைகளை அரசாங்கம் மீறியுள்ளமை நம்பிக்கையீனத்தை ஏற்படுத்தியுள்ளதாகச் சங்கத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இன்று நடைபெறவுள்ள மத்திய குழுக் கூட்டத்தின் போது, அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் நாடு தழுவிய ரீதியிலான தொழிற்சங்கப் போராட்டங்களை முன்னெடுப்பதா அல்லது மாற்று நடவடிக்கைகளில் ஈடுபடுவதா என்பது குறித்து இறுதி முடிவு எடுக்கப்படவுள்ளது. (அ)

## தவறான கல்வி முறையை அறிமுகப்படுத்திய பிரதமர் ஹரிணியை எவ்வாறு காப்பாற்றமுடியும்?

**பாராளுமன்றில் சம்பத் எம். பி. கோரிக்கை**

கொழும்பு, ஜன. 07

"முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தவறான ஊசி மருந்துக்காக சிறையில் அடைக்கப்பட்டார் என்றால் தவறான கல்வி தொகுதியை அறிமுகப்படுத்தியமைக்காக பிரதமர் ஹரிணி அமரசூரியவை எவ்வாறு காப்பாற்ற முடியும்", என்று பாராளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தசநாயக்க கேள்வி எழுப்பியுள்ளார்.

நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் அவர் கூறுகையில் "அடுத்த விடயம் இந்த "மொடியூல்" பிரச்னை. இந்த விவகாரத்தில் நாம் பிரதமரை அவமதிக்கவில்லை. இதில், உள்ள உண்மை என்னவென்றால், தவறு எங்கே நடந்தது என்பது மாத்திரமல்ல. இப்போது பாருங்கள், அந்தத் தவறை யார் செய்தது? ஊசிகளை செலுத்தியது யார்? கெஹலிய ரம்புக்வெல மருந்துகளைக் கொண்டு வந்தார் என்று வைத்துக்கொள்வோம். மருந்துகளைக் கொண்டு வந்தாலும், கெஹலிய ரம்புக்வெலவா அந்த ஊசியைப் போட்டார்? இல்லை, மருத்துவமனையில்தான் அந்த ஊசி போடப்பட்டது. ஆனால், இறுதியில் சிறைக்குச் சென்றது கெஹலிய ரம்புக்வெல தான். அதேபோல்தான், இந்த விவகாரத்திலும் பிரதமர் தனது பொறுப்பிலிருந்து விலகிச் செல்ல முடியாது" என கூறினார்.

உதாரணமாக, கடந்த காலங்களில் மாகாண சபையின் வைப்புத் தொகையை காலத்துக்கு முன்பே மீளப் பெற்றதாகக் கூறி நான் சிறைக்கு அனுப்பப்பட்டேன். உண்மையில், அந்தப் பணத்தை மீளப் பெற்றவர்கள் தலைமைச் செயலாளர் மற்றும் கணக்காளர் ஆவர்.

ஆனால், சிறைக்குச் சென்றது நான்தான். இதேபோல்தான் பிரதமரும் இதிலிருந்து தப்பிக்க முடியாது என குறிப்பிட்டார். அத்துடன், கெஹலிய ரம்புக்வெலவுக்கும் சாமர சம்பத்துக்கும் தண்டனை வழங்கப்பட்டது என்றால், அதே முறையில் பிரதமருக்கும் தண்டனை வழங்கப்பட வேண்டும். இல்லையெனில், இந்தப் பிரச்னையிலிருந்து விடுபட பிரதமர் தனது பதவியை இராஜிநாமா செய்ய வேண்டும் - என்றார். (ஐ)

## நுண்கடன் பிரச்னைகளுக்கு தீர்வு காண புதிய சட்டமூலம்

கொழும்பு, ஜன. 07

நுண்கடன் தொடர்பில் நிலவும் பிரச்னைகளைத் தீர்ப்பதற்காக பாராளுமன்றத்தில் புதிய சட்டமூலம் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் நிபுணாரச்சி தெரிவித்துள்ளார்.

நுண்கடன் பெற்ற சுமார் 200 பெண்கள் இதுவரை தற்கொலை செய்து கொண்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார். கொழும்பில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் நிபுணாரச்சி இதனைக் குறிப்பிட்டார்.

இதேவேளை, கொழும்பு பங்குச் சந்தையின் பெயர் மற்றும் சின்னத்தை தவறாகப் பயன்படுத்தி வைப்பாளர்களிடம் பல மில்லியன் ரூபாய் மோசடி செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

போலியான கையடக்கத் தொலைபேசி செயலி ஊடாக இந்த மோசடி மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கொழும்பு பங்குச் சந்தையின் சிரேஷ்ட உப தலைவர் நிரோஷன் விஜேசுந்தர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் குற்றப்புலனாய்வுத் திணைக்களம் ஏற்கனவே விசாரணைகளை ஆரம்பித்துள்ளதுடன், கடந்த வருடம் நவம்பர் மாதம் முதல் இந்த மோசடி இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 07.01.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.